தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்
செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் கடந்த மாதம் 11.11.2018 அன்று நடத்தப்பட்ட தொகுதி II க்கான முதனிலைத் தேர்வின் முடிவுகள் 17.12.2018 அன்று வெளியிடப்பட்டது, மேலும் அதற்கான முதன்மை எழுத்துத் தேர்வு 23.02.2019 அன்று நடத்தப்படவுள்ளது.

இந்நிலையில், தொகுதி II க்கான முதன்மை எழுத்துத் தேர்வு நடைபெறவிருக்கும் அதே நாளில் (23.02.2019) ஏற்கனவே நடைபெறுவதாக தேர்வாணையத்தால் அறிவிக்கப்பட்டிருந்த பல்வேறு துறைகளில் நிரப்பப்பட வேண்டிய நூலகர் **(Librarian in Various Department**) பணியிடங்களுக்கான எழுத்துத் தேர்வினையும் அதே போல் 24.02.2019 அன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த தொல்பொருளியல் **(Archaeology Department)** துறையில் நிரப்பப்பட வேண்டிய நூலகர் பணியிடங்களுக்கான எழுத்துத் தேர்வினையும் பின்வருமாறு நடத்த தேர்வணையம் முடிவு செய்துள்ளது.

| வ. எண் | தேர்வின் பெயர் | அறிவிக்கப்பட்ட தேதி | மாற்றப்பட்ட தேதி |
|---|---|---|---|
| 1 | நூலகர் (பல்வேறு துறைகள்) (**Librarian Grade-I in Industries and Commerce Department, Librarian in Agriculture Department, Film Librarian in Agriculture Department, Librarian and Information Assistant Grade-I for Anna Centenary Library in Public Libraries Department, Librarian and Information Assistant Grade-II for Anna Centenary Library in Public Libraries Department, Librarian in Legislative Assembly Secretariat)** | 23.02.2019 | 30.03.2019 |
| 2 | நூலகர் (தொல்பொருளியல் துறை) (Librarian in Archaeology Department) | 24.02.2019 | 31.03.2019 |

இத்தேர்வுகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய 4 மாவட்டங்களில் நடைபெறும்.

க.நந்தகுமார்
செயலாளர்